மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மீன் விளையாது, மீனை வளர்க்கவேண்டும். அப்படி inter-State problem இருப்பதாக இதுவரையில் அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. அப்படி ஏதேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அதைப் பற்றி எழுதித் தந்தால் அரசு பரிசீலிக்கும்.

தமிழகத்தில் போக்குவரத்துக் கழக மோட்டல்கள்.

91—(*வினா எண். 6068) திரு. க. சோலைராசு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள் எத்தனை மோட்டல்களை நடத்தி வருகின்றன?

(ஆ) மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டியில் எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) போக்குவரத்துக் கழகங்கள் தற்சமயம் 10 மோட்டல்களை நடத்தி வருகின்றன.

(ஆ) மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டியில் மோட்டல் 17—1—1986 முதல் இயங்கி வருகிறது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கிற மோட்டல்களின் கட்டிட அமைப்பு சரியான முறையில் அமைக்கப்படாததால், கழிப்பிட வசதியின்றி பொதுமக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அதே போல் இந்த மோட்டல்களை நடத்துகிறவர்கள், அதன் சமையல் கூடங்கள் போன்றவற்றை முறையான அளவில் கட்டாததால் அங்குள்ளவர்களும் துன்பப்படுகிறார்கள். எனவே வரக் கூடிய காலங்களில் சிறப்பான முறையில் இவைகளை அமைக்க வழிவகை செய்யப்படுமா? மேலும் ஏற்கனவே நடைபெறுகிற மோட்டல்களில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பேசியபோது அவர்கள் கருத்துச் சொல்லியதற்குக் காரணம், பல இடங்களில் வண்டிகள் போய் நிற்கிறபோது, தனியார்கள் நடத்துகிற அந்த சிற்றுண்டிச்சாலைகள் சரியாக இல்லை. எனவே இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, அது துவக்கப்பட்டது. இந்த அரசினுடைய நோக்கமாக, குறைந்தபட்சம் 50 கி.மீட்டருக்கு ஒரு மோட்டல் இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டோடு, நாம் இந்த வேலைகளை முதலிலே துவக்கியிருக்கிறோம். ஆரம்பக் கட்டத்திலே 100 கிலோ மீட்டருக்கு ஒன்று என்று துவக்கினாலும், காலப்போக்கிலே முடிவு அடைகிறபோது, 50 கி. மீட்டருக்கு ஒரு மோட்டல் என்று வர வேண்டும் என்று நாங்கள் ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு இடம் கிடைப்பதே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இப்போது ஏறக்குறைய 10 இடங்களிலே நான் ஏற்கனவே சொன்னது மாதிரி—அவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் வசதியான அளவிற்கு கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று நாம் நினைத்தாலும், உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற காரணத்தால் கழிப்பறை வசதிகளை மட்டும் சிறப்பாகச் செய்து கொடுத்துவிட்டு, மற்றபடி கொஞ்சம் கூரைக் கட்டிடங்களாக இருந்தாலும் கூடப் பரவாயில்லை, நல்ல உணவு கொடுப்பதற்கு அங்கே ஏற்பாடுகளைச் செய்தால் போதும் என்ற நிலைமையில் இந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். எனவே நிதிப் பிரச்சினையின் காரணமாக இதையெல்லாம் உடனடியாகச் செய்ய முடியவில்லை என்றாலும், அடிப்படை வசதியான கழிப்பறை போன்ற வசதிகளை உடனே செய்து விட்டு, மற்ற வசதிகளை தொடர்ந்து செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அமைக்கப்படுகிற அந்த மோட்டல்களின் எதிர்ப்புறம் அழகான முறையில் பூங்கா அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். பூங்காக்கள் அமைக்க போதிய பொருளாதார வசதி இல்லை என்று சொன்னால், மற்ற வங்கிகள்

அல்லது தனியார் அல்லது அதை நடத்தக் கூடியவர்களே விரும்புகிறார்கள் என்று சொன்னால், கடைக்கு எதிர்ப்புறம் உள்ள பகுதிகளில் அழகான வடிவம் அமைத்து, பூங்காக்கள் அமைக்கப்படுமா ? மேலும் மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்கிற அந்தப் பாதையிலே தங்குகிற, உணவு கிடைக்கக்கூடிய இடங்கள் சரியான அளவில் இல்லை. எனவே, மேட்டுப்பாளையத்திலேயிருந்து ஊட்டிக்குச் செல்கிற இடையில் ஒரு மோட்டல் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அங்கே அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு மிகத் திண்டாட்டமான நிலையிருக்கிறது. காரணம் எல்லா இடங்களிலேயும் ஒரேகாலத்திலே செய்யவேண்டும் என்று நாம் முயற்சி எடுக்கவேண்டிய காரணத்தால் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னேன். எனவே இந்தச் சூழ்நிலையில் பூங்கா அமைப்பது உண்மையிலே உடனடியாக நடக்க முடியாத காரியம். மேலும் பேங்க் போன்ற நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார்கள் யாருக்காவது கொடுக்கவேண்டும் என்றும், அப்படிக் கொடுத்தால் அவர்கள் அதைச் செய்வார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். சாதாரணமாக அவர்கள் நகரத்தினுடைய எல்லைக்குள்ளே செய்வதற்குத்தான் தயாராக இருப்பார்களே தவிர, அங்கே செய்வது என்பதும் அவைகளைப் பராமரிப்பது என்பதும் அவர்களுக்கு சிரமமாக இருக்கும். இருந்தாலும் அதைக் கேட்டுப் பார்க்கலாம்.

(முற்பகல் 10-50)

அடுத்து மேட்டுப்பாளையத்திற்கும் ஊட்டிக்கும் இடையில் இந்த மோட்டல்கள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். இடத்தைப்பற்றித்தான் பிரச்சினையாக இருக்கிறது. இடம் கிடைத்த உடன் அதைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.